செ.வெ.எண்: 59 நாள்: 26.10.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் இன்று (26.10.2016) நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று துவக்கிவைத்து பேசியதாவது:-

விவசாயிகள் குறைகளை மனுக்களாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வுகாண விவசாயிகள் குறைதீர்க்கும் பிரதி மாதம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் தரிசு நிலத்தில் வேப்பமரம் வளர்க்க மானியம் வழங்க கோரியும், தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் இலவச உரம் வழங்க கோரியும் ஆலங்குடி உழவர் சந்தையை செயல்படுத்த வேண்டியும், மோட்டார் சீர்செய்ய கடன் வழங்க கோரியும் என வரப்பெற்ற 32 மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையளவைப் பொறுத்த அளவில் அக்டோபர் 2016ம் மாதத்தில் இயல்பான மழையளவான 182.3 மி.மீக்கு, இதுவரை பெறப்பட்ட மழையளவு 50.44 மி.மீ ஆகும். நடப்பு 2016 ஆண்டுக்கு இம்மாதம் வரை பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவான 606.44மி.மீக்கு இதுவரையில் பெறப்பட்ட மழையளவு 368.51 மி.மீ ஆகும்.

நடப்பாண்டு நெல் 6568 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 1819 எக்டர் பரப்பளவிலும், பயறுவகை பயிர்கள் 1917 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் 3728 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 2868 எக்டர் பரப்பளவிலும், தென்னை 9360 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 452.978 மெ.டன் நெல் விதைகளும், 30.381 மெ.டன் பயறு விதைகளும், நிலக்கடலை 10.520 மெ.டன் தற்சமயம் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 3796 மெ.டன்னும், டிஏபி 653 மெ.டன்னும், பொட்டாஷ் 724 மெ.டன்னும், 1257 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வரப்படுகிறது.

சம்பா தொகுப்புத்திட்டம்: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 18.08.2016 அன்று சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு சம்பா தொகுப்புத்திட்டம் அறிவிக்கப்பட்டு புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளும் பயன்பெறுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. சம்பா தொகுப்புத்திட்ட உதவிகள்: நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ள வசதியாக தரிசு நிலங்களை உழவு மேற்கொள்ளும் பணிகளுக்கு ஏக்கருக்கு ரூ.500/- பின்னேற்பு மானியம், தரமான சான்று பெற்ற உயர் விளைச்சல் நெல் இரக விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.10/- வீதம் மானியம், நேரடி நெல் விதைப்பு வயல்களில் களைக்கட்டுப்பாடு மேற்கொள்ள வசதியாக களைக்கொல்லி பயன்படுத்திட ஏக்கருக்கு ரூ.250/- பின்னேற்பு மானியம், துத்தநாக சத்து குறைபாட்டினை நிவர்த்தி செய்திட துத்தநாக சல்பேட் பயன்படுத்திட ஏக்கருக்கு ரூ.200/- பின்னேற்பு மானியம், விதைப்புக்கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.600/- பின்னேற்பு மானியம், இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.2000/- பின்னேற்பு மானியம்.

..2..

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா தொகுப்புத்திட்டம் காவிரி டெல்டா பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, கறம்பக்குடி, கந்தர்வக்கோட்டை மற்றும் திருவரங்குளம் வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கண்ட மானியத்தொகையில் உழவு 18000 ஏக்கர் பரப்பளவிலும், களைக்கொல்லி வினியோகம் 12500 ஏக்கர் பரப்பளவிலும், துத்தநாக சல்பேட் வினியோகம் 3000 ஏக்கர் பரப்பளவிலும் விதைகள் 200 மெ.டன் அளவிலும், விதைப்பு கருவி மூலம் நேரடி நெல் விதைப்பு 1300 ஏக்கர் பரப்பளவிலும், இயந்திரம் மூலம் நெல் நடவு மானியம் 1000 ஏக்கர் பரப்பளவிலும் மொத்தம் ரூ.161 இலட்சம் மானியம் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

மானிய விலையில் விதைகள் விநியோகம்: தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் (அரிசி) திட்டத்தின் கீழ் 10 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட நெல் ரகங்களான ஆடுதுறை 49, கோ 49, கோ(ஆர்) 50, கோ(ஆர்) 51, என்.எல்.ஆர்.34449 மற்றும் அண்ணா-4 விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.10/- மானியம் வழங்கப்படுகிறது. தேசிய உணவு பாதுகாப்புத்திட்டம் (பயறு) திட்டத்தின் கீழ் 15 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட உளுந்து ரகங்களான வம்பன் 4, வம்பன் 5, வம்பன் 6, துவரையில் கோ-7 ரகத்திற்கும் மற்றும் தட்டைபயரில் கோ-7 ரக விதைகளுக்கும் கிலோவிற்கு ரூ.25/- மானியம் வழங்கப்படுகிறது. எண்ணெய் வித்து பெருக்கத் திட்டத்தில் 15 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட நிலக்கடலை ரகங்களான டி.எம்.வி.13, கோ-4, கே-6 மற்றும் டிஏஜி-24 விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.25/- மானியம் வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி (சிறுதானியம்) திட்டத்தின் கீழ் 10 வருடங்களுக்குள் வெளியிடப்பட்ட சிறுதானிய ரக விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.15/- மானியம் வழங்கப்படுகிறது.

தரமான விதைகளை விவசாயிகள் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும் நோக்கத்தில் விதை கிராமத் திட்டத்தில் அனைத்து ரக நெல், பயறு வகை மற்றும் நிலக்கடலை விதைகளுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. நெல் விதைக்கு ஒரு கிலோவிற்கு ரூ.10/-, பயறு வகை விதைகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.25/- மற்றும் நிலக்கடலை விதைக்கு ஒரு கிலோவிற்கு ரூ.25/- வீதம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் வீதம் விதைகள் வநியோகம் செய்யப்படுகிறது.

மரஎண்ணெய் பயிர்களில் பரப்பினை அதிகரிக்கும் நோக்கத்தில் தேசிய எண்ணெய் வித்து இயக்கத் திட்டத்தில் பயன்படுத்தப்படாத தரிசு நிலங்களில் வேம்பு மற்றும் புங்கம் மரக்கன்றுகளை நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. வேம்பு மரக்கன்றுகள் நடவிற்கு 1 எக்டருக்கு அதிகபட்சமாக ரூ.17000 பின்னேற்பு மானியமும் (400 கன்றுகள்/எக்டர்) புங்கம் மரக்கன்றுகள் நடவிற்கு 1 எக்டருக்கு ரூ.20000 பின்னேற்பு மானியமும் வழங்கப்படுகிறது. இதுகுறித்த மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினை தொடர்பு கொள்ளலாம் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**